


**06.10.2026**

தலைப்புச் செய்திகள்

1. மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் தற்போது நடைபெற்று வருகிறது.

பகல் 1 மணி நிலவரப்படி மதுராந்தகத்தில் 55.19 சதவிகிதமும்,

தாராபுரத்தில் 56.09 சதவிகித வாக்குகளும் பதிவாயின.

2. நாட்டின் அனைத்து மொழிகளையும் இணைக்கும் பாலமாக சமஸ்கிருதம் திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர்
திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் தொ◌ிவித்துள்ளார்.

3. வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி வாழ்வாதார சட்டத்தின் புதிய கட்டமைப்பின் கீழ் 375 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4. பொங்கல் பண்டிகைக்கான இலவச வேட்டி சேலைக்கான உற்பத்தி பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தொ◌ிவித்துள்ளார்.

5. இந்திய வெஸ்ட்இண்டிஸ் அணிகளுக்கு இடையேயான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

வாக்குப்பதிவு

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் தற்போது நடைபெற்று வருகிறது.

பகல் 1 மணி நிலவரப்படி மதுராந்தகத்தில் 55.19 சதவிகிதமும்,

தாராபுரத்தில் 56.09 சதவிகித வாக்குகளும் பதிவாகியுள்ளன.

முன்னதாக இன்று காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

மதுராந்தகத்தில் பதற்றமான மேல்வளம் பேட்டை வாக்குச்சாவடியை இன்று பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மு. வீரப்பன், 285 வாக்குச்சாவடிகளும் வெப் கேமரா மூலம் கண்காணிக்கப்படுவதாக தெரிவித்தார்.

வாக்குப்பதிவு எவ்வித புகார்களும் இன்றி அமைதியாக நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

.. வாய்ஸ் ..

மதுராந்தகத்தில் த.வெ.க., தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., மார்க்சிஸ் கம்யூனிஸ்ட், நாம்தமிழர், கட்சி வேட்பாளர்கள் உட்பட 27 பேர் களத்தில் உள்ளனர்.

தாராபுரத்திலும் த.வெ.க., தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், நாம்தமிழர் கட்சி வேட்பாளர்கள் உட்பட 22 பேர் களத்தில் உள்ள நிலையில், ஆயிரத்து 486 தேர்தல் பணியாளர்களும்,

320 நுண் பார்வையாளர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் கொளிஞ்சிவாடி நகராட்சி நடுநிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் நடைபெற்று வரும் வாக்குப்பதிவினை மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர். மனீஷ்நாரனவரே இன்று நேரில் பார்வையிட்டதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

இத்தேர்தலுடன் புதுச்சேரி தட்டாஞ்சாவடி சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெறும் தேர்தலில் நண்பகர் ஒருமணி நிலவரப்படி 56.27 சதவிகித வாக்குகளும்,

மேற்குவங்க மாநிலம் ரெஜிநகரில் 56.43 சதவிகிதமும்

நந்திகிராமில் 60.32 சதகிவித வாக்குகளும் பதிவாயின.

அசாம் மாநிலம் நகோன் மக்களவை தொகுதிக்கு இன்று நடைபெறும் இடைத்தேர்தலில் பகல் ஒருமணி நிலவரப்படி 56.35 சதவிகித வாக்குகள் பதிவாயின.

இடைத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் வெள்ளிக்கிழமை எண்ணப்பட்டு, முடிவுகள் அன்றைய தினமே அறிவிக்கப்படும்.

❖❖❖❖❖❖❖❖❖

சி.பி.ராதாகிருஷ்ணன்

நாட்டின் அனைத்து மொழிகளையும் இணைக்கும் பாலமாக சமஸ்கிருதம் திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் தொ◌ிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய சமஸ்கிருத பல்கலைக் கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், ஒவ்வொரு மொழியும் இன்றியமையாதது என்றும், தேசத்தின் கலாச்சாரத்திற்கு அவை அளப்பரிய பங்காற்றி இருப்பதாகவும் கூறினார்.

அறிவியல் இலக்கியம், தத்துவம் போன்ற பிரிவுகளில் சமஸ்கிருதம் சிறப்பிடம் பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சமஸ்கிருத மொழியை மேம்படுத்துவதற்காக பிரதமர் திரு. நரேந்திரமோடி சிறப்பு செயல்திட்டங்களை மேற்கொண்டு உள்ளதாகவும் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத்சிங்

நாட்டின் கடல்சார் ஆற்றலை மேம்படுத்தி பாதுகாப்பு திறன்களை வலுப்படுத்த, ஒருங்கிணைந்த வலிமையான

கடல்சார் சூழலின் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

விசாகப்பட்டினத்தில், போர்க்கப்பல்களுக்கு எரிபொருள், உணவு பொருட்கள் உள்ளிட்டவற்றை விநியோகிக்கும் ஆதரவு கப்பல்களை இன்று அறிமுகம் செய்து பேசிய அமைச்சர், இதன்மூலம் நாட்டின் கடல்சார் கட்டமைப்பு திறன் அதிகரிக்கப் பட்டிருப்பதாக கூறினார்.

சூரியா எனப்படும் கடல்சார் ஆதரவு கப்பல் 1, இந்திய கடற்படையின் திறனையும், செயல்பாட்டையும் மேலும் வலுப்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

உரிய நேரத்தில் விநியோகம், உற்பத்தி திறன், உள்நாட்டு வடிவமைப்பு, விநியோக சங்கிலிகளை வலுப்படுத்துவது, திறன்மிகு மனித சக்தி, திறன் விரிவாக்கம், போட்டித்திறன் ஆகியவற்றிற்கு உயர் முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

புதிய கடல்வழி பாதை மற்றும் பிரம்மாண்ட நவீன எடைத்தூக்கி கிரேன், பெரியஅளவிலான கட்டமைப்பு திட்டங்களை மேற்கொள்ள வழி கோலுவதாக குறிப்பிட்டார்.

நம் தேசத்தின் கப்பல் கட்டுமான பணிகளிலும், பாதுகாப்பு தேவைகளிலும் கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக ஹிந்துஸ்தான் கப்பல் கட்டமைப்பு நிறுவனம் முக்கிய பங்காற்றி வருவதாக எடுத்துரைத்தார்

2047-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த பாரதமாக நம் தேசத்தை உருவாக்கும் வகையில் சுயசார்பு நடவடிக்கைகளும்,

வளமிகு பொருளாதார முன்னெடுப்பு பணிகளும் மேற்கொள்ளப் படுவதாக திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்த நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தின், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, கேரள மாநிலம் விழிஞ்ஞம் துறைமுகம் கட்டமைப்பு தளம் குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. Music ..

வளர்ச்சியடைந்த பாரத பாதைக்கு எடுத்துக்காட்டாக கேரள மாநிலத்தின் விழிஞ்ஞம் சர்வதேச துறைமுகம் நாட்டின் முக்கிய கடல்சார் நுழைவாயிலாக உருவெடுத்துள்ளது.

20 மீட்டர் ஆழம் கொண்ட இந்த துறைமுகம் உலகளாவிய மிகப்பெரிய சரக்கு பெட்டகங்களை கையாளும் திறனை பெற்றுள்ளது.

2025-ம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திரமோடி இந்த துறைமுகத்தை திறந்துவைத்த நிலையில், ஓராண்டிற்குள் 10 லட்சம் TEU அலகுகள் கையாளப்பட்டு உலகளாவிய கப்பல் பரிவர்த்தனை மையமாக இது மேம்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் இத்துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி செயல்பாடுகள் தொடங்கப்பட்ட நிலையில்

உலகின் மிகச்சிறந்த இணைப்பு மற்றும் நேரடி மையமாக உருவெடுத்து வர்த்தகம், வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சியில் இன்றியமையா பங்காற்றி வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

வளர்ச்சி அடைந்த பாரதம்

வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி, வாழ்வாதார சட்டத்தின் புதிய கட்டமைப்பின் கீழ் 375 பணிகளுக்கு அனுமதி வழங்கி மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த புதிய பட்டியலில் முன்பிருந்த 266 பணிகள் 41 சதவிகிதம் விரிவுப்படுத்தப்பட்டு நீர்ப்பாதுகாப்பு, ஊரக கட்டமைப்பு, வாழ்வாதாரம் சார்ந்த பணிகள், காலநிலை சிறப்பு பணிகள் மற்றும் பேரிடர் தயார் நிலையின் கீழ் புதிய பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கிராம சபைகளின் அங்கீகாரம் பெற்று கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் இந்த புதிய பட்டியல் வகுக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்த பாரத பயணத்தில் உள்ளடக்கிய வளர்ச்சி, காலநிலை சவால்களை எதிர்கொள்ளுதல் போன்றவற்றை எதிர்கொள்ளும் வகையில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

விஜய் பாலாஜி

தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகைக்கு வழங்கப் படவுள்ள இலவச வேட்டி சேலைக்கான உற்பத்தி பணிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விரைவாக நடைபெற்று வருவதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தொ◌ிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இதுதொடர்பாக துறை அதிகாரிகள் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

தொடக்க வேளாண்மை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு ரொக்க விலையில் உரங்கள், விதைகள் வழங்கப்படும் என கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்களை விவசாயிகள் சாகுபடி பரப்பு நில ஆவணங்களின் அடிப்படையில் ரொக்கம் கொடுத்து நேரடியாக பெற்றுக் கொள்ளலாம்

கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இல்லாத விவசாயிகள் உறுப்பினராக இணைந்து, ரொக்கம் கொடுத்து நேரடியாக இவற்றைபெற வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

ரமேஷ்

தூத்துக்குடி மாவட்டம் குலசேகர பட்டினம் அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோவிலில் தசரா பண்டிகை வரும் 11-ம் தேதி தொடங்குகிறது.

விழா ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தொ ிவித்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

ஈரோடு நீதிமன்ற வளாகத்தில் சமரச தீர்வு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட முதன்மை நீதிபதி சமீனா இன்று தொடங்கிவைத்தார்.

நீதிபதிகள், வழக்கறிஞர்கள் உட்பட 200-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

நெல்லை பாளையங்கோட்டையில் காலநிலை நீதிக்கான விழிப்புணர்வு நடைப்பயணத்தை ஆட்சித்தலைவர் திரு. ஆனந்த் மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

இயற்கை வளங்களை காப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு வலியுறுத்தி சுற்றுச்சூழல் அமைப்புகள், பசுமை குழுக்கள், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் சனிக்கிழமை நடைபெறுகிறது.

8-ம் வகுப்பு முதல் பட்டம், பட்டயம், பொறியியல் உள்ளிட்ட கல்வி தகுதி உடையவர்கள் இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு. நல்லசிவன் அறிவுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய வெஸ்ட்இண்டிஸ் அணிகளுக்கு இடையேயான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இரு அணிகளுக்கு இடையே 5 போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் 2-வது போட்டி வரும் வெள்ளிக்கிழமை ராஞ்சியில் நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖